# யூலை - 06 - சனி

புனித மரியகொறட்டி

“ஆண்டவரைப் புகழுங்கள்! ஏனெனில், அவர் நல்லவர்” - திபா 135 : 3

## முதல் வாசகம் : தொடக்க நூல் 27 : 1 – 5, 15 – 29

ஈசாக்கு முதிர்ந்தவயதை அடைந்தபோது அவர் கண்களின் பார்வை மங்கிப்போயிற்று. அவர் தம் மூத்தமகன் ஏசாவை அழைத்து, ”என் மகனே” என்றார் ஏசா, ”இதோ வந்துவிட்டேன்” என்றான். அவர் அவனை நோக்கி, ”இதோ பார் எனக்கு வயதாகிவிட்டது. சாவு எந்நாள் வருமோ என்றறியேன். இப்பொழுது உன் கருவிகளான வில்லையும், அம்புக்கூட்டையும் எடுத்துக்கொள். காட்டுக்குப் போ. வேட்டையாடி, எனக்கு வேட்டைக்கறி கொண்டு வா. நான் விரும்பும் முறையில் சுவையான உணவு வகைகளைச் சமைத்து என்னிடம் கொண்டுவா. நான் அவற்றை உண்பேன். நான் சாகுமுன், உனக்கு மனமார ஆசி வழங்குவேன்” என்றார். ஈசாக்கு தன்மகன் ஏசாவிடம் பேசியதை ரெபேக்கா கேட்டுக்கொண்டிருந்தார். வேட்டையாடி வேட்டைக்கறி கொண்டுவருமாறு ஏசா காட்டிற்குப் புறப்பட்டவுடன், ரெபேக்கா தம்முடன் வீட்டில் வைத்திருந்த தம் மூத்த மகன் ஏசாவின் உடைகளில் சிறந்தவற்றைத் தம் இளைய மகன் யாக்கோபுக்கு உடுத்துவித்தார். அவன் கைகளையும் மிருதுவான கழுத்தையும் வெள்ளாட்டுக் குட்டிகளின் தோலால் மூடினார். அவர் சுவையான உணவு வகைகளையும், தாம் சுட்ட அப்பங்களையும் தம் மகன் யாக்கோபின் கையில் கொடுத்தார். அவனும் அவற்றைத் தன் தந்தையிடம் எடுத்துச்சென்று, ”அப்பா” என்று அழைத்தான். அவரும் மறுமொழியாக, ”ஆம் மகனே, நீ எந்த மகன்?” என்றுகேட்க, யாக்கோபு தன் தந்தையிடம், ”நான்தான் உங்கள் தலைப்பேறான ஏசா. நீங்கள் சொன்னவாறு செய்திருக் கிறேன். எழுந்து உட்கார்ந்து என்வேட்டைப் பதார்த்தங்களை உண்டு மனமாற எனக்கு ஆசிவழங்குங்கள்” என்றான். ”மகனே! இது உனக்கு இவ்வளவு விரைவில் எப்படி அகப்பட்டது?” என்றுகேட்க, அவன், ”உம் கடவுளாகிய ஆண்டவரால்தான் எனக்கு இது நிகழ்ந்தது, ”என்றான். ”மகனே, அருகில் வா, நீ உண்மையிலேயே என் மகன் ஏசாதானா என்று நான் உன்னைத் தடவிப்பார்த்துத் தெரிந்துகொள்வேன்” என்றார். யாக்கோபு தன் தந்தை அருகில் வந்தான். ”குரல் யாக்கோபின் குரல் ஆனால் கைகளோ ஏசாவின் கைகள்” என்றார். அவன் கைகள் அவன் சகோதரன் ஏசாவின் கைகளைப்போல் உரோமம் அடர்ந்தவையாய் இருந்ததால், அவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. எனவே அவனுக்கு ஆசி வழங்கினார். மீண்டும் அவர் ”நீ உண்மையிலேயே என் மகன் ஏசாதானா?” என்று வினவ, அவனும் ”ஆம்” என்றான். அப்பொழுது அவர், ”மகனே உண்பதற்கு வேட்டைப்பதார்த்தங்களைக் கொண்டு வா. மனமார நான் உனக்கு ஆசி வழங்குவேன்” என்றார். அவ்வாறே யாக்கோபு கொண்டுவர, அவர் அதை உண்டார். பின், அவன் திராட்சை இரசம் கொண்டுவர, அவர் அதைக்குடித்தார். அப்பொழுது அவன் தந்தை அருகில் வந்து என்னை முத்தமிடு” என்றார். அவனும் அருகில் போய் அவரை முத்தமிட, என் மகனிடமிருந்து எழும்பும் நறுமணம்! ஆண்டவரின் ஆசிபெற்ற விளைநிலத்தின் வாசனையாம்! வானின் பனித்துளியும் மண்ணின் செழுமையும், மிகுந்த தானியமும், திராட்சை இரசமும் கடவுள் உனக்கு வழங்குவாராக! நாடுகள் உனக்குப் பணிபுரிந்திடுக! மக்கள் உனக்குப் பணிந்திடுக! உன்தன் சோதரர்க்குத் தலைவன் நீ ஆகிவிடுவாய்! உன் அன்னையின் மைந்தர் உன்னடி பணிந்திடுவர்! உன்னைச் சபிப்பார் சாபம் பெறுக! உன்னை வாழ்த்துவார் வளமுற வாழ்க!” என்றார்.

**பதில்பாடல்:** ஆண்டவரைப் புகழுங்கள்.ஏனெனில் அவர் நல்லவர்.

## நற்செய்தி : மத்தேயு 9 : 14 - 17

பின்பு யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, ”நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?” என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, ”மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். மேலும் எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை. ஏனெனில் அந்த ஒட்டு ஆடையைக் கிழித்துவிடும் கிழிசலும் பெரிதாகும். அதுபோலப் பழைய தோற்பைகளில் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றிவைத்தால் தோற்பைகள் வெடிக்கும் மதுவும் சிந்திப்போகும் தோற்பைகளும் பாழாகும். புதிய மதுவைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றிவைப்பர். அப்போது இரண்டும் வீணாய்ப்போகா” என்றார்.

**தியானம்:** நோன்பைப் பற்றிய இயேசுவின் பார்வை என்ன? பரிந்துரை என்ன? என்பதை அழியா வார்த்தைகளின் நற்செய்தி தெரிவிக்கிறது. யோவானின் சீடர்களும், பரிசேயர்களும் அதிகமாக நோன்பு இருக்க, இயேசு தம் சீடரை நோன்பு இருக்க வலியுறுத்தவில்லை. மாறாக, வெளிவேடமான நோன்பைவிட, உள்ளரங்கமான தூய்மையும், பிறரன்புமே மேலானது என்பதைத் தம் அனுபவ வாயிலாக சீடர்களுக்குக் கற்றுத்தந்தார். நற்செய்தியை நாம் ஆழமாக உற்று நோக்கின், வெளிவேடமற்ற நோன்பை இயேசு ஆதரித்தார். “மணமகன் அவர்களைவிட்டுப் பிரியும் காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்’’ என்றுரைத்தார். அதன்படியே, இயேசுவின் விண்ணேற்றத்துக்குப்பின் தொடக்கத் திரு அவை நோன்பிருக்கும் பழக்கத்தை “அவர்கள் நோன்பிருந்து இறைவனிடம் வேண்டினார்கள்’’ என்னும் செய்தியை (திருத்தூதர் பணிகள் 13:3) வாசிக்கிறோம். நோன்பு என்பது ஆன்மீகவாழ்வின் முக்கிய நெறிகளில் ஒன்றாயினும், ஆரோக்கிய வாழ்விற்கும் அடிப்படைத் தேவையானதாக இருக்கிறது. நோன்பு உடலின் உணர்வுகளைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. நாம் உண்ணும் உணவுக்கும், நமது உணர்வுகளுக்கும் இடையே ஏராளமான தொடர்பு இருக்கிறது. நாம் உண்ணும் உணவைப்பொறுத்து, நம்முடைய உணர்வுகளும் மாற்றம் பெறுகிறது. கணணி உலகம் என்று பிதற்றிக்கொள்கிற இக்காலத்தில் மூடக் கொள்கைகளுக்காக மனைவியை மட்டுமல்ல பிஞ்சுக் குழந்தைகளை மற்றும் பிறமத நம்பிக்கையாளர்களை கொலை செய்யும் சம்பவங்களும், நிகழ்ச்சிகளும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட உணர்வுகளால் தூண்டப்படுகிற நிலைமாறி, தன்னையே அடக்கி ஆள்கிற கட்டப்பாட்டுடனான வாழ்விற்கு நோன்பு உறுதுணையாக இருக்கிறது என்றால் அது மிகையாகாது. நோன்பு எனும் மாற்று மருந்தை எப்போதும் பயான்படுத்தக்கூடாது. மாறாக, தெய்வீக வல்லமை நிறைந்த நோன்பு என்னும் மருந்தை, நம் வாழ்வின் இருள் சூழ்ந்த நேரங்களில் ஆன்மீகம் தளர்ந்து அலகையின் ஆதிக்கம் நம்மை ஆட்கொண்டு, நம் வாழ்வை சீர்குலைக்கும் போது, நோன்பு இருப்போம். அது மணமகனாம் இயேசுவிடம் நம்மைக் கொண்டு சேர்க்கும்.